கந்தபுராணத்தில் மெய்ப்பொருளியல் கூறுகள்

முனைவர் பட்ட ஆய்விற்குரிய **(Ph.D)** முன் வரைவு ஆய்வறிக்கை

முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)

செல்வி க.பவித்ரா

பதிவு எண் : **20PHTMF011**

ஆய்வு நெறியாளர்

முனைவர் சு.பரணி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., பிஎச்.டி.,

தமிழ்த்துறை

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

கோயம்புத்தூர் - 641 043.

நவம்பர் - 2023

கந்தபுராணத்தில் மெய்ப்பொருளியல் கூறுகள்

பழங்காலத்தில் வாழ்ந்த நம் முன்னோர்கள், நாம் யார்? நாம் இவ்வுலகிற்கு எப்படி வந்தோம்? நாம் உழைப்பதற்கான காரணம் என்ன? போன்ற தத்துவ விசாரணையை மேற்கொண்டதன் விளைவே தத்துவப் பள்ளிகள் உருவாவதற்குக் காரணம் ஆகும். தத்துவம் என்பது தமிழில் மெய்ப்பொருளியல் என அறியப்படுகிறது. வேத காலத்திலிருந்தே தத்துவங்கள் தோற்றம் பெறுகின்றன. ஒவ்வொரு தத்துவப் பள்ளிகளும் பல்வேறு கருத்துகளினால் வேறுபட்டாலும், ஆன்மா, மனம், இறைவன் ஆகியவற்றையே அடிப்படையாகக் கொண்டதாக அமைகிறது. தத்துவங்களுள் மிகச் சிறந்ததாகவும், செழுமையானதாகவும் அமையும் தத்துவம் சைவ சித்தாந்தம் ஆகும். சைவ சித்தாந்தத்தை மக்கள் உணர்ந்துகொள்ளும் வகையிலே பல இலக்கியங்களையும் சாத்திர நூல்களையும் அருளாளர்கள் இயற்றியுள்ளனர்.

தமிழ் இலக்கிய வகைமையான புராண இலக்கியங்களில் சிறப்பானதாகக் கூறப்படும் ஓர் நூல் கந்தபுராணம் ஆகும். கச்சியப்ப சிவாச்சாரியாரின் கந்தபுராணமானது முருகப்பெருமானின் கதையினை விரித்துக் கூறுகிறது. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடைபெறும் போர் மற்றும் முருகப்பெருமானின் பிறப்பு, திருவருட்செயல்கள், தெய்வத்திருமணங்கள் ஆகியவற்றை மட்டுமே பதிவு செய்வதாக இல்லாமல் தத்துவக் களஞ்சியமாகவும் திகழ்கின்றது. சைவ சித்தாந்தக் கருத்துகள் பல கந்தபுராணத்தில் பொதிந்துள்ளன. கந்தபுராணத்தில் குறிப்பிடப்பெறும் சித்தாந்தக் கருத்துகள் மெய்ப்பொருளின் உண்மைத் தன்மையையும், உயிரின் இயல்பையும், உயிரை மறைக்கும் மலப்பிணிப்புகளையும் விளக்கியுரைக்கின்றது. இவற்றை நன்கு அறிந்து வீடுபேறு அடைய வேண்டும் என்கிற கருத்தினை கந்தபுராணம் வலியுறுத்துகின்றது.

ஆய்வுத் தலைப்பு

ஆய்வின் தலைப்பானது, **'கந்தபுராணத்தில் மெய்ப்பொருளியல் கூறுகள்'** என்பது ஆகும்.

ஆய்வின் நோக்கம்

கந்தபுராணம் தேவ - அசுர யுத்தத்தையும், முருகனைப் பற்றியும் எடுத்துரைக்கும் புராணக் கதை மட்டுமல்ல. இது மக்கள் கடைப்பிடித்து வாழ வேண்டிய அறங்களையும், வாழ்வியல் முறைகளையும் வகுத்துக் கூறும் நூலாகவும் அமைகின்றது. இயந்திரத்தனமான வாழ்க்கையை மட்டும் வாழாமல் சிறிது இறைச் சிந்தனையையும் பெற்று தத்துவ விசாரணையை மேற்கொண்டு வாழ்தலும் மக்களுக்கு அவசியமாகும். அவ்வகையில், கந்தபுராணத்தின் வழியே மக்களுக்கு ஆன்மீக நாட்டத்தை ஏற்படுத்துவதும், வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடித்து வாழ்தலும் அவற்றின் மூலமாக மக்கள் பெறும் பயன்பாட்டு நிலையை எடுத்துரைப்பதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

கருதுகோள்

சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் ஆகிய மூன்றினை அடிப்படையாகக் கொண்டதாகும். பதி என்னும் மெய்ப்பொருள், பசு என்னும் உயிர், உயிரைப் பிணிக்கும் பாசத்தளைகள் ஆகியவற்றை உணர்த்துவதன் மூலம் உயிர்களுக்கான வீடுபேற்றினை கந்தபுராணம் வலியுறுத்துகின்றது எனக் காண்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு எல்லை

கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய கந்தபுராணத்தின் பாயிரம் தொடங்கி அமைந்துள்ள 10,345 பாடல்களும் (6 காண்டங்கள்) ஆய்வு எல்லையாக அமைகின்றன.

ஆய்வு ஆதாரங்கள்

கச்சியப்ப சிவாச்சாரியாரின் கந்தபுராணம் முழுவதும் ஆய்வின் முதன்மைச் சான்றாதாரமாக அமைகின்றது. பதினான்கு மெய்கண்ட சாத்திர நூல்கள், திருமுறைகள், சைவ சித்தாந்த நூல்கள், தத்துவம் சார்ந்த நூல்கள், சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், திறனாய்வு நூல்கள், ஆய்வேடுகள், ஆய்வுக்கட்டுரைகள், அகராதிகள், நிகண்டுகள், களஞ்சியங்கள் முதலானவை துணைமைச் சான்றாதாரங்கள் ஆகும்.

ஆய்வு அணுகுமுறை

கந்தபுராணத்தில் உள்ள பதி, பசு, பாசம் ஆகிய மூன்றையும் விளக்குமிடத்து விளக்கமுறை அணுகுமுறையும், பகுத்துக் கூறுமிடத்து பகுப்பாய்வு முறையும், புராணக் கதைகளை ஆராயுமிடத்து தொன்மவியல் அணுகுமுறையும், பாடல்களின் உட்கருத்தை மெய்ப்பொருள் பார்வையில் காணுமிடத்து தத்துவவியல் அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வு முன்னோடிகள்

வ.எ	ஆய்வுத் தலைப்பு	ஆய்வாளர்	நெறியாளர்	பல்கலைக்கழகம்	ஆண்டு
1.	கந்தபுராண ஆராய்ச்சி	ந.இராமலிங்கம்	முனைவர். வ.சுப.மாணிக்கம்	காமராசர் பல்கலைக்கழகம்	1979
2.	கந்தபுராணத்தில் சைவ சித்தாந்தக் கோட்பாடுகள்	மா.திருநாவுக்கரசு	முனைவர். மு.சிவசந்திரன்	பாரதிதாசன் பல்கலைக்கழகம்	2006
3.	கந்தபுராணத்தில் மீவியல் புனைவுகள்	த.ஜெயலட்சுமி	முனைவர். இரா.வசந்தமாலை	பெரியார் பல்கலைக்கழகம்	2012
4.	பன்முகப் பார்வையில் கந்தபுராணம்	பா.சுதா	முனைவர். வீ.சிவபாதம்	பாரதிதாசன் பல்கலைக்கழகம்	2014
5.	கந்தபுராணத்தில் பக்திக் கோட்பாடுகளும் பாத்திரப்படைப்பும்	அ.சுப்பாத்தாள்	முனைவர். சந்திரா கிருட்டிணன்	பாரதியார் பல்கலைக்கழகம்	2015
6.	தொல்காப்பிய மெய்ப்பாட்டியலும் கந்தபுராணமும்	வெ.புவனேஸ்வரி	முனைவர். சௌ.கீதா	பெரியார் பல்கலைக்கழகம்	2016

7.	கந்தபுராண யாப்பியல்	க.சசி	ய.மணிகண்டன்	சென்னைப் பல்கலைக்கழகம்	2016

ஆய்வுப் பகுப்பு

கந்தபுராணத்தில் மெய்ப்பொருளியல் கூறுகள் என்னும் இவ்வாய்வானது முன்னுரை முடிவுரையுடன், ஆறு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

இயல் - 2 மெய்ப்பொருளியல் - ஓர் அறிமுகம்

இந்திய தத்துவங்கள் மிகவும் பழமை வாய்ந்தவை. அவை உயிர், இறைவன், அண்டம் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டது. மனிதனின் மனதுள் ஏற்படும் ஆழமான கேள்விகளுக்கு விடைக் காணத் துடிக்கும் பயணங்களாகவே தத்துவங்கள் திகழ்கின்றன. மெய் என்பதன் பொருள் உண்மை. உண்மையைக் கண்டறியும் இத்தத்துவ முயற்சியே மெய்ப்பொருளியல் ஆய்வாகும். வடமொழியில் தத்துவம் என்று வழங்கப்படுவதே தமிழில் மெய்ப்பொருளியல் என்றும், மெய்யியல் என்றும் வழங்கப் பெறுகிறது. இது மேலை, கீழை என இருவகைப்பட்டு நிற்கின்றது. நமது இந்திய தத்துவங்கள் கீழை மெய்யியலுக்குள் அடங்குகின்றது.

தத்துவம்

தத்துவம் என்பது உண்மையான தன்மையை ஆராய்ந்து அறிவதாகும். ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் பொருள்களின் தன்மையை வரையறுத்து அறிவதே தத்துவம் எனப்படுகிறது. மேலும், பிரபஞ்சம், மனித வாழ்வு ஆகியவற்றை மையமிட்டதாகவும் தத்துவம் அமைகின்றது எனலாம். இந்தியத் தத்துவங்கள் வேதங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். வேதத்தை ஏற்றுக்கொள்பவை, ஏற்றுக்கொள்ளாதவை என்பதைக் கொண்டே இந்தியத் தத்துவங்கள் பகுக்கப்படுகின்றன.

சமயம்

இந்திய சமயங்களில் தத்துவம் இணைந்தே காணப்படுகிறது. சமயம் என்பது மனிதர்களை நெறிபடுத்தும், பண்படுத்தும் நெறியாக விளங்குகின்றது; மக்களின் மனங்களைப் பக்குவப்படுத்துகின்றது. இதுவே சமயத்திற்கு அடிப்படையாகத் திகழ்கிறது எனலாம். இந்தியாவில் பல சமய மரபுகள் காணப்படினும் முக்கியமாக ஆறு சமயங்கள் கூறப்படுகின்றன. அவை : சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் ஆகியவையாம்.

சைவ சமயம்

சிவபெருமானை முழுமுதற்பொருளாகக் கொண்டு வழிபடப்படும் சமயமே சைவ சமயமாகும். சைவ சமயம் மிகவும் தொன்மையான சமயமாகும். தமிழகத்தில் சைவ சமயமானது மிகவும் செழித்து விளங்கியது. 12 திருமுறைகள் சிவபெருமானைப் போற்றும் பக்திப் பாமாலைகள் ஆகும். 14 சாத்திரங்கள் சைவ சமயத்தினுடைய தத்துவக் குவியல்களாக அமைகின்றன. இவற்றைத் தவிர சிற்றிலக்கியங்கள், புராணங்கள் முதலானவையும் சைவ சமயத்தை வளர்த்தெடுத்தன எனலாம்.

கந்தபுராணம்

புராணம் என்பது பழமையைக் குறிக்கின்றது. தமிழ்ப் புராணங்களில் மிக முக்கியமான ஓர் நூல் கந்தபுராணம் ஆகும். இது காஞ்சிபுரத்தைச் சேர்ந்த கச்சியப்ப சிவாச்சாரியர் என்பவரால் கி.பி.14ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகும். வடமொழியில் உள்ள ஸ்கந்தபுராணத்தில் சங்கர சங்கிதை எனும் பகுதியிலுள்ள சிவரகசிய கண்டத்திலிருந்து தழுவி தமிழில் கந்தபுராணம் எழுதப்பட்டுள்ளது. ஆறு காண்டங்களும், 10,345 பாடல்களும் கந்தபுராணத்தில் இடம்பெற்றுள்ளது.

சைவ சமய ஏற்பும் பிற சமய மறுப்பும்

கந்தபுராணத்தில் சைவ சமயக் கருத்துகள் பலவிடங்களில் இடம்பெற்றுள்ளன. முருகனுடைய கதையாக இருப்பினும் சிவபெருமானே போற்றப்படுகிறார். முருகப்பெருமான் சிவனின் ஓர் அருட்சக்தியாக அறியப்படுகிறார். முருகனை வழிபடும் சமயமான கௌமாரத்திற்குக் கந்தபுராணம் முக்கியமான சமய நூலாகக் கருதப்பட்டாலும், கச்சியப்ப சிவாச்சாரியார் கௌமார சமயத்தையோ அதன் நெறிமுறைகளையோ வலியுறுத்தவில்லை.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம் (கந்தபுராணம், 5:4)

அறுசமயத்தில் கடந்தசைவத்தின் அன்றி வீடுஇல (கந்தபுராணம், 229:1-2)

முதலான பாடலடிகள் சைவ சமயத்தை வலியுறுத்தி நிற்பதனைக் காண முடிகிறது. கந்தபுராணம் சமணம், பௌத்தம், சாக்தம், உலகாயதம், வைணவம், வேதாந்தம் முதலான சமய, தத்துவ நெறிகளையும் சிலவிடங்களில் குறிப்பிட்டு மறுத்துப் பேசியுள்ளது. ‘உற்றதோர் மேன்மை நாடி உன்னை நீ பிரமம் என்றே தெற்றெனத் தெளிதி’ (கந்தபுராணம், 2501:1-2) என சுக்கிராச்சாரியார் போதித்த வேதாந்த நெறியைப் பின்பற்றும் சூரபன்மனுக்கு இறுதியில் அழிவே ஏற்படுகின்றது என்பதையும் அறிய முடிகின்றது.

சைவ சித்தாந்தம்

சைவ சமயத்தின் மெய்ஞ்ஞானச் சிந்தனைகளின் தொகுப்பே சைவ சித்தாந்தம் ஆகும். இது பதி (இறைவன்), பசு (உயிர்), பாசம் (மும்மலங்கள்) ஆகிய மூன்றினை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களால் பிணிக்கப்பட்டுள்ள உயிர்கள் அவற்றை நீங்கி இறைவனை அடைந்து பேரின்ப நிலையான வீடுபேற்றினைப் பெறுதல் வேண்டும் என்று சைவ சித்தாந்தம் எடுத்துரைக்கின்றது.

மெய்ப்பொருளியல் ஆய்வு, தத்துவம், சமயம், புராணம் ஆகியவை விளக்கப்பட்டு, கந்தபுராணத்தில் அமைந்துள்ள சமயச்சார்பும், சைவ சமயத்தின் மெய்ப்பொருள் சிந்தனைகளை எடுத்துரைக்கும் சைவ சித்தாந்தம் குறித்த அடிப்படை செய்திகளும் முதல் இயலில் ஆராயப்படுகின்றன.

இயல் - 3 கந்தபுராணத்தில் மெய்ப்பொருளின் இயல்பு

சைவ சித்தாந்தம் கூறும் பதி என்பவர் இறைவன் ஆவார். அவரே மெய்ப்பொருளும் ஆவார். முழுமுதற்பொருளான சிவபெருமான் ஆதியும் அந்தமும் அற்றவர். அனைத்திற்கும்

மூலமுதற் காரணமாக இருப்பவர். இந்த உலகத்தைப் படைப்வரும் அவரே; சங்காரக்கடவுளாகி அழிப்பதும் அவரே ஆவார்.

விதிமுதல் உரைக்க நின்ற வியன்உயிர்த் தொகைகட்(கு) எல்லாம்

பதிஎன அருளும் தொன்மைப் பசுபதி தானும் (கந்தபுராணம், 8300:1-2)

என்று கந்தபுராணம் பதியைச் சுட்டிக் கூறுகின்றது. பதி எனும் இறைவனுக்குத் தாய் தந்தையர் இல்லை; மேலான தலைவராகவும் பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய் உயிருக்கு உயிராய் இருக்கக்கூடியவர் என்பதனை,

வேதக் காட்சிக்கும் உபநிடத்(து) உச்சியில் விரித்த

போதக் காட்சிக்கும் காணலன் புதியரில் புதியன்

மூதக் கார்க்குமூ தக்கவன் முடிவிற்கு முடிவாய்

ஆதிக்(கு) ஆதியாய் உயிர்க்(கு)உயி ராய்நின்ற அமலன் (கந்தபுராணம், 4837)

என்னும் கந்தபுராணப் பாடலின் வழி அறிய முடிகிறது. இக்கருத்தினோடு,

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே

பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே (திருவாசகம், 163:1-2)

என்னும் திருவாசகப் பாடல் ஒப்புநோக்கத்தக்கதாகும்.

இறைவனின் இயல்புகள்

மெய்ப்பொருளான இறைவனின் இயல்புகள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவை : சிறப்பு இயல்பு (சொரூப இலக்கணம்), பொது இயல்பு (தடத்த இலக்கணம்) ஆகியவையாகும்.

சிறப்பு இயல்புகள் - எண்குணங்கள்

வேறொரு பொருளின் சார்பினால் மாறுபடாமல், தன்னையே தான் நோக்கி நிற்கும் காலங்களில் காணப்படும் இயல்புகளே இறைவனின் சிறப்பு இயல்புகளாகும். இது எண்குணங்கள் என அறியப்படுகின்றன. இறைவன் எண்குணத்தவன் என்பதனை, எண்தகு குணத்தின் மேலாம் இறையவன் (கந்தபுராணம், 572:1) என்று கந்தபுராணம் குறிப்பிடுகின்றது. தன்வயம் உடைமை, தூய உடம்பு உடைமை, இயற்கை உணர்வுடைமை, முற்றுணர்வுடைமை, இயல்பாகவே பாசமின்மை, பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பில் இன்பம் உடைமை ஆகிய எட்டும் இறைவனின் சிறப்பான இயல்புகளாகும். இவற்றைக் கந்தபுராணம் மிக விரிவாக எடுத்துரைக்கின்றது.

ஐந்தொழில்கள்

ஆன்மாக்கள் இம்மை, மறுமை, வீடு முதலியவற்றைப் பெற வேண்டும் என்பதற்காக நடைபெறுவனவே ஐந்தொழில்களாகும். அவை : படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாகும்.

அளித்திடல் காத்திடல் அடுதல், மெய்யுணர்

ஒளித்திடல் பேரருள் உதவல் ஏயெனக்

கிளத்திடு செயல்புரி கின்ற நீலமார்

களத்தினன் பதியது கழறும் வேதமே (கந்த.பு, 1963)

என்னும் கந்தபுராணப் பாடல் இறைவனுடைய ஐந்து தொழில்களையும் குறிப்பிடுகின்றது. மேலும், பலவிடங்களில் இறைவனுடைய தொழில்கள் குறித்து கந்தபுராணம் விளக்கியுரைப்பதனையும் காண முடிகின்றது.

இறைவனின் திருவுரு

இறைவன் தடத்த நிலையில் தொழில் செய்யும்பொழுது திருவுரு அவசியமாகிறது. உயிர்களுக்கு அருள் புரியவும், உமாதேவியை இடபாகத்தில் கொண்டு உயிர்களுக்கு இன்பமளிக்கவும், வீடுபேறு தரவும் இறைவன் உருவம் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது என்று சிவஞானசித்தியார் கூறுகின்றது. அனைத்துத் தத்துவங்களையும் கடந்தவரான சிவபெருமான் ஒன்பது வகையான பாவனைகளைக் கொண்டு விளங்குவார். இதனை நவந்தருபேதம் என்பர். சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவம், மகேசன், உருத்திரன், திருமால், பிரமன் ஆகிய ஒன்பதும் நவந்தருபேதம் என்று உரைக்கப்படுகிறது. இவற்றுள் கந்தபுராணத்தில் சிவபெருமானுடைய மகேசுவர வடிவங்கள் குறித்து அதிகம் காணக்கிடைக்கின்றன.

சக்தியின் வகைகள்

இறைவனுடைய சக்திகளாக கந்தபுராணம் உமையம்மை, முருகப்பெருமான், விநாயகர் ஆகியோரைக் குறிப்பிடுவதனை அறிய முடிகிறது. உமையம்மை இறைவனின் மனைவி ஆவார். அவர் இறைவனின் சக்தியின் உருவமே. தொழில்கள் புரிய இறைவனுக்குத் துணை நிற்கும் ஆற்றலே சக்தி ஆகும். முருகப்பெருமான் இறைவனின் சக்தியின் கூறு ஆவார். இறைவனின் நெற்றியிலிருந்து தோன்றிய ஆறு தீப்பொறிகளே முருகப்பெருமானாக உருவம் கொண்டது. கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணத்தில் பலவிடங்களில் சிவபெருமானும் முருகப்பெருமானும் ஒருவரே என ஒன்றுபடுத்துகின்றார்.

ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போல் பிரிவிலன் யாண்டும் நின்றான் (கந்தபுராணம், 1070:1-2)

முதலான பாடலடிகள் இக்கருத்தினை வலியுறுத்துவனவாக அமைகின்றன. மேலும், விநாயகரும் சிவபெருமானின் அருட்சக்தியே என்பதனைக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது.

அத்துவிதம்

இறைவனுக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பு நிலையே அத்துவிதம் ஆகும். இறைவன் உயிர்களோடு ஒன்றாய், உடனாய், வேறாய் இருக்கின்றார். இந்நிலையினைக் கந்தபுராணம்,

ஊனாகி ஊனுள் உயிராய்உயிர் தோறும் ஆகி
வான்ஆதி ஆன பொருளாய்மதி ஆகி வெய்யோன்
தானாகி ஆண்பெண் உருவாகிச் சராச ரங்கள்
ஆனான் சிவன்மற்(று) அவன்நீள்கழற்(கு) அன்பு செய்வாம் (கந்தபுராணம், 7)

என்று குறிப்பிடுகின்றது. இப்பாடலோடு,

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்

கோனாகி யான்எனது என்று அவர் அவரைக் கூத்தாட்டு

வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே (திருவாசகம், 19)

என்னும் திருவாசகப் பாடல் ஒப்புநோக்கத்தக்கதாகும்.

பதி என்னும் இறைவனே மெய்ப்பொருள் ஆவார். சிவபெருமானின் எண்குணங்களையும், ஐந்தொழில்கள், திருவுருவங்கள், சக்திகள் ஆகியவற்றையும் கந்தபுராணம் விரிவாக எடுத்துரைக்கின்றது. எனவே கந்தபுராணம் முன்னிறுத்தும் மெய்ப்பொருள் சிவபெருமானே என்பதை அறிய முடிகின்றது. மேலும், கதைத்தலைவராக முருகப்பெருமான் திகழ்ந்தாலும் அவர் சிவபெருமானின் அருட்கூறுதான் என்னும் மையக்கருத்தும் புலப்படுகின்றது.

இயல் - 3 கந்தபுராணம் வழி மெய்யுணர் நிலை

உயிர் (அ) ஆன்மா

சைவ சித்தாந்தம் உயிரைப் பசு என்று கூறுகிறது. உயிர் (அ) ஆன்மா மலபந்தத்தால் பிணிக்கப்பட்டு இறைவனை அடைய முடியாமல் தவிக்கின்றது. பாசத்தால் கட்டப்பட்டுள்ளதாலேயே உயிர் 'பசு' என்று பெயர் பெற்றுள்ளது. **'பாசம் தன்னில் பட்டுழல் பசுநாம் (கந்தபுராணம், 8309:1)'** எனக் கந்தபுராணம் கூறுகிறது. மேலும்,

மூவகை எனும்தளை மூழ்கி உற்றிடும்
ஆவிகள் உலப்பில அநாதி உள்ளன
தீவினை நல்வினைத் திறத்தின் வன்மையால்
ஓவற முறைமுறை உதித்து மாயுமே (கந்தபுராணம், 1965)

என்னும் பாடலில், ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று தளைகளால் கட்டுண்டது; அநாதியாக உள்ளன; நல்வினை, தீவினைகளால் ஓய்வின்றி இவ்வுலகில் தோன்றியபடி இருக்கும் என்னும் கருத்தானது பெறப்படுகிறது. உயிரின் இயல்புகளை அறிவு நிலை, எண்ணிக்கை, சார்ந்ததன் வண்ணமாதல், இடைப்பட்ட நிலை, விரி அளவு ஆகிய ஐந்து நிலைகளில் அறிய முடிகின்றது.

ஆன்மாவின் நிலைகள் அவத்தைகள் என அறியப்படுகின்றன. அவை காரண நிலைகள், காரிய நிலைகள் என்றளவில் மூன்றவத்தைகளாகவும், ஐந்தவத்தைகளாகவும் திகழும். மேலும், ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலப் பிணிப்புகளின் அடிப்படையில் உயிர்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படுகின்றனர். இவ்வுயிர் இவ்வுலகில் செயலாற்றவே உடல் தேவைப்படுகிறது. எனவே உடலும் உயிரும் வேறு வேறானவை என்பதனையும் அறிய முடிகிறது. உயிர்கள் வினையின் காரணமாகப் பிறப்பெடுக்கின்றன. அவ்வினையினாலே இறக்கின்றன. இவ்வாறு உயிர்கள் உயிர்கள் பிறவிச் சுழலில் பல்வேறு நிலைகளில் சிக்கித் தவிக்கின்றது என்பதனைக் கந்தபுராணம் பலவிடங்களில் விரிவாக விவரித்துள்ளது.

ஆணவ மலம்

உயிருக்கு அறியாமையை ஏற்படுத்துவதே ஆணவமலம். செம்பில் இயற்கையாகவே களிம்பு இருப்பது போல உயிரினிடத்தில் ஆணவம் அமைந்திருக்கும். ஆணவ மலத்தின் பிணிப்பு

ஒவ்வொரு உயிர்களிடம் ஒவ்வொரு விதத்தில் அமைந்திருக்கும். ஆணவம் ஆன்மாவிற்கு இருளைத் தருவது. கன்மம், மாயை இரண்டும் அந்த இருளை விளக்கத் துணைபுரியும் சிறிய விளக்குகள். ஆன்மா சிவத்தைப் பற்றியிருக்கும் காலத்தில் ஆணவம் ஆன்மாவைப் பற்றாது; ஆன்மா சிவத்தைப் பிரிந்த கணம் மீண்டும் ஆணவ மலம் பற்றிக் கொள்ளும். **ஆசின் வழியாம் அகந்தைத்திறன் ஆதி யாய பாசங்களை (கந்தபுராணம், 9923:2-3), இவ்வுல கத்தோர் உள்ளத்(து) எய்திய இருளும் (கந்தபுராணம், 8531:1), இல்லாய் உளதொல் இறுமாப்(பு) (கந்தபுராணம், 2945:1)** முதலான பாடலடிகள் ஆணவ மலத்தைக் குறிப்பனவாக அமைகின்றன. மேலும், கந்தபுராணக் கதைமாந்தர்கள் ஆணவ மல மறைப்பினால் அறியாமை ஏற்பட நடந்து கொண்ட நிகழ்வுகளும் பொருத்திப் பார்க்கப்படுகின்றது.

கன்ம மலம்

ஒருவர் செய்யும் செயல்களே கன்மங்கள் ஆகும். இதனை வினை, ஊழ் என்றும் கூறுவர். கன்மம் உயிர்களின் பிறவிக்குக் காரணமாக அமைகின்றது. உயிர்கள் தாம் செய்யும் வினைகளினால் இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன. மாயை என்னும் பாசத்தால் ஈர்க்கப்பட்டு நடைபெறும் செயல்களாலே நல்வினை, தீவினை ஆகிய இரு வினைகள் ஏற்படுகின்றன என்பதனை, **'ஈர்க்கும் பாசத்து இருவினை' (கந்தபுராணம், 283:1)** என்று கந்தபுராணம் குறிப்பிடுகின்றது. வினைகளைக் கழிக்க பிறவிகள் எடுக்கப்படும். பிறவியெடுத்து ஒரு வினையைக் கழிக்க முற்படும்போது மற்றுமொரு வினை ஏற்படும். இவ்வாறு வினைகள் ஆற்றுநீர் போல் தொடர்ந்து கொண்டே இருப்பதால் 'பிரவாக அநாதி' என்பர். விதியை மதியால் வெல்லலாம் என்று கூறுவர்; ஆனால், **'மிடல்கெழு விதியைப் புந்தி விலக்குமோ' (கந்தபுராணம், 4949:3)** எனக் கந்தபுராணம் கூறுகிறது.

மனம், வாக்கு, காயத்தினால் வினைகள் நிகழும். இக்கன்மம் ஆகாமியம், சஞ்சிதம், பிரார்த்தம் என மூவகைப்படும். கந்தபுராணத்தின் கதைக்கருவே வினைக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்துள்ளது என்பது விளக்கப்பட்டுள்ளது. மேலும், கதை நிகழ்வுகளில் காணப்படும் வினை மற்றும் வினை நீக்கத்திற்கான வழிகளும் கந்தபுராணத்தின் வழி ஆராயப்படுகின்றது.

மாயா மலம்

மும்மலங்களில் மூன்றாவது மலமாகும். உலகத் தோற்றத்திற்கு மாயை முதற்காரணமாகத் திகழ்கிறது. மாயை ஆன்மாக்களை பற்றுமேயன்றி இறைவனைப் பற்றாது. இறைவன் தத்துவங்கள் அனைத்தையும் கடந்தவர், **'மூலமாகிய தத்துவம் முழுவதும் கடந்து மேல் உயர்ந்திடு தனிமுதல்' (கந்தபுராணம், 4841:3-4)** என்று கந்தபுராணம் குறிப்பிடுகின்றது. மாயையின் காரியங்கள் தனு, கரண, புவன, போகம் ஆகும். இந்த அதிதூலப் பொருட்களை அதிசூக்குமமான மாயை நேரடியாக செயல்படுத்த முடியாது என்பதால் தத்துவங்களின் வழியே மாயை செயலாற்றுகிறது.

சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என மாயை மூவகைப்படுகிறது. இவற்றிலிருந்து சிவதத்துவங்கள் - 5, வித்தியா தத்துவங்கள் - 7, ஆன்ம தத்துவங்கள் - 24 என மொத்தம் 36 தத்துவங்கள் தோற்றம் பெறுகின்றன. இவற்றுள் ஆன்ம தத்துவங்கள் குறித்தே

கந்தபுராணத்தில் அதிகம் காணக் கிடைக்கின்றது. மேலும், அசுரர்களின் மாயையை வைத்து மாயா மலத்தைப் பொருத்தியும் காண முடிகிறது.

பாசம் என்னும் மலபந்தத்தால் பிணிக்கப்பட்டு உள்ளதாலேயே ஆன்மா பசு என்று அறியப்படுகிறது. எனவேதான் பசுவும் பாசமும் ஒன்றிணைந்து ஆராயப்படுகிறது. ஆன்மா குறித்தும், அந்த ஆன்மாவைப் பிணித்துள்ள பாசத்தைக் குறித்தும் அறியும்பொழுது அறிவுத் தெளிவு ஏற்படும். அதுவே மெய்யுணர் நிலையாகும். அவ்வகையில் கந்தபுராணம் பசு மற்றும் பாசங்கள் குறித்து விளக்கியுரைத்து மக்களுக்கு தெளிவை ஏற்படுத்துகிறது. ஆழமான சித்தாந்த விரிவாக்கங்களாக இல்லாமல் பாமர மக்களுக்கும் புரியும் வகையில் உள்ள எளிமையான கருத்துகளைக் கொண்டே கந்தபுராணம் பசு, பாசங்களை விளக்குகிறது.

இயல் - 5 கந்தபுராணத்தில் வீடுபேறு

ஞானத்திற்கானப் படிநிலைகள்

வீடுபேறு என்பது உயிர்கள் மும்மலங்களை நீங்கி இறைவனை அடையும் நிலையாகும். பெறற்கரிய வீடுபேற்றினைப் பெறுவதற்கு ஐந்துப் படிநிலைகள் அமைகின்றன. அவை, வேட்கை, மலபரிபாகம், இருவினையொப்பு, சத்திநிபாதம், தவம் ஆகியவையாம். உயிர்களுக்கு வீடுபேற்றினைப் பெற வேண்டும் என்கிற அவா ஏற்பட வேண்டும். இறைவனின் அருளினால் ஆணவ மலம் குறையத் தொடங்கும். நல்வினை, தீவினை இரண்டையும் சமமாகப் பாவிக்கும் பக்குவ நிலை ஏற்படும். இந்நிலையில் உயிர்கள் தவம் என்னும் சிவபுண்ணியங்களைச் செய்யத் தொடங்கும்.

நான்கு நெறிகள்

சிவபெருமானை நோக்கிச் செய்யப்பெறும் அனைத்து செயல்பாடுகளும் தவத்திற்குள் அடங்கும். இது சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளாகும். கந்தபுராணம் விநாயகர், முருகர், சிவபெருமான் ஆகியோர் குறித்து வழிபாடுகள் நிகழ்த்தப்பெறும் செய்திகளைக் குறிப்பிடுகின்றது. கந்தபுராணக் கதைமாந்தர்கள் சிலர் யோக நிலைகளை மேற்கொண்ட செய்திகளும் காணப்படுகின்றன. சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று நெறிகளைக் கடைப்பிடித்தாலும் இறுதியில் ஞானத்தையே அடைவர்.

வீடுபேறு

உயிர்களின் குறிக்கோள் இறைவனை அடைய வேண்டுமென்பதாகும். வீடுபேறு என்பது உயிர்கள் பிறவிக்கு வராத நிலையெனப்படுகிறது. பிறப்பு, இறப்பு எனும் சுழற்சியிலிருந்து விடுபட்டு, இறைவனை அடைந்து பேரின்பம் பெற்று உய்ய வேண்டும் என்பதே உயிர்களின் விருப்பம். உயிர்களை மறைத்துள்ள மும்மலங்களினால் தான் உயிர்களினால் இறைவனை அடைய முடிவதில்லை. அவை உயிர்களை விட்டு விலகும்போது கிடைத்தற்கரிய வீடுபேறு கிடைக்கும். கந்தபுராணம்,

சேர்ந்துழிப் பிறவியும் தீரும் தொன்மையாய்ச்
சார்ந்திடு மூவகைத் தளையும் நீங்கிடும்
பேர்ந்திடல் அரியதோர் பேர்இன் பந்தனை

ஆர்ந்திடும் அதன்பரி(சு) அறைதற்(கு) ஏயுமோ (கந்தபுராணம், 1973)

என, ஆன்மாக்கள் சிவபெருமானைச் சென்று அடைந்த பிறகு, அவற்றைச் சார்ந்திருக்கும் மும்மலங்கள் நீங்கும். அதனால் பிறப்பும் அகலும். அவை அகலும்போது ஆன்மாக்கள் பேரின்பத்தை அனுபவிக்கும். முத்தியானது பரமுத்தி, அபரமுத்தி, பதமுத்தி, சீவன்முத்தி என நான்கு வகைகளாக அமைகின்றது. இவற்றைக் குறித்தும், ஞானகுரு, தீக்கை, சைவ சமய அடையாளங்கள், சிவனடியார்கள் குறித்தும் கந்தபுராணம் எடுத்துரைக்கின்றது.

கந்தபுராணம் மேலோட்டமாக புராணக் கதையை விரித்துரைப்பதாகவும், அறக்கருத்துகளைக் கூறி மக்களை நல்வழிப்படுத்த முயற்சிப்பதாகவும் காணப்பட்டாலும் கூட, ஆழ்ந்து நோக்கும்போது உயிர்களைப் பிணத்துள்ள மலங்களை உணர்ந்து, மெய்ப்பொருளின் துணையோடு வீடுபேற்றை ஆன்மாக்கள் பெற்று உய்ய வேண்டும் என்கிற கருத்தே அதிகம் பெறப்படுகிறது. எளிய முறை வழிபாடுகள், ஆகம முறைப்படியான வழிபாடுகள், திருத்தல வழிபாடுகள், விரதங்கள் ஆகியவற்றைக் கூறி மக்களை சரியை, கிரியை நெறிகளில் நின்று செயல்பட கந்தபுராணம் வழிகாட்டுகிறது.

ஆய்வு முடிவுகள்

மெய்ப்பொருளியல் என்பது ஒரு பொருளின் உண்மைத் தன்மையைக் கண்டறியும் முயற்சியாகும். அவ்வகையில் சைவ சித்தாந்த மெய்ப்பொருள் சிந்தனைகளின் அடிப்படையில் கந்தபுராணத்தை ஆராய்வதாக இவ்வாய்வு அமைந்திருக்கின்றது.

கந்தபுராணம் முருகனின் கதையை விரித்துரைப்பதாக இருந்தாலும் சைவ சமயத்தையே மிகவும் வலியுறுத்தி நிற்கின்றது. சிவபெருமானுக்குரிய எண்குணங்கள், ஐந்தொழில்கள், திருமேனிகள், சக்திகள் முதலியவற்றை விரிவாக எடுத்துரைப்பதன் மூலம் கந்தபுராணம் சுட்டும் மெய்ப்பொருள் சிவபெருமானே என அறிய முடிகிறது.

கந்தபுராணம் உயிரின் தன்மைகளான சிற்றறிவு நிலை, எண்ணிக்கை, சிறப்பியல்பான சார்ந்ததன் வண்ணமாக இருத்தல் ஆகியவற்றை எடுத்துரைக்கின்றது. மேலும், மூவகை உயிர்களைப் பற்றியும் உடல் மற்றும் பிறப்பு இறப்பு சுழற்சி குறித்தும் அதிகம் கூறுகின்றது. அவத்தைகள் போன்ற ஆழ்ந்த சித்தாந்தப் பகுதிகளைத் தவிர்த்து மக்களுக்கு எளிதில் புரியும் வகையில் உயிர்களினுடைய தன்மையை கந்தபுராணம் விளக்குகிறது என்பதைத் தெளிவாக அறியலாம்.

உயிர்களைப் பற்றியிருக்கும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றினுள் கன்மம் குறித்தே கந்தபுராணம் அதிகம் பேசுகிறது. கந்தபுராணத்தின் கதைக்கருவே வினைக்கொள்கையை வலியுறுத்தும் விதமாக அமைந்திருப்பதைக் காண முடிகிறது. மேலும், கதையின் போக்கிலே பல இடங்களிலும் வினையின் தன்மையும், அவ்வினையைப் போக்குவதற்கான வழிகளையும் கந்தபுராணம் வலியுறுத்துக் கூறுகின்றது எனலாம். மக்கள் வினையின் தன்மையை நன்குணர்ந்து செயல்படுவதே வீடுபேற்றிற்கான முதல்படி என்னும் கருத்து வலிமையாகப் பெறப்படுகின்றது.

ஆணவ மலமே உயிர்களுக்கு அறியாமையை ஏற்படுத்துவதாகும். எனவேதான், அவ்வறியாமையினால் உயிர்கள் செய்யும் செயல்களையும், அதனால் ஏற்படும் எதிர்வினைகளையும் கதையினூடே கதை மாந்தர்களின் மூலம் கந்தபுராணம் வெளிப்படுத்துகின்றது. அதேபோல மாயையை ஆணவ மலத்தைப் போக்கிக் கொள்ள பயன்படுத்தாமல் தீய வழிகளில் செலுத்தும்பொழுது கெடுதல் ஏற்படும் என்பதனை அசுரர்களின் மாயைத் தன்மையைக் கந்தபுராணக் கதை உணர்த்தி நிற்கின்றன. ஆணவம் மற்றும் மாயையின் சித்தாந்த விளக்கங்களாக இல்லாமல், கதையின் வழியே மக்களுக்கு உணர்த்தும் விதமாகவே புராணக்கதை அமைந்துள்ளது. சுத்த மாயை, அசுத்த மாயை முதலானவை ஆழ்ந்த தத்துவச் சிந்தனைகள் என்பதால் எளிதில் உணரத்தகும் பிரகிருதி மாயை குறித்த செய்திகள் மட்டுமே காணப்படுகின்றன என்பதையும் உணர்தல் வேண்டும்.

இறைவன், உயிர், மும்மலங்கள் பற்றி அறிந்து கொள்வதோடு மட்டும் நிற்காமல், உயிர்கள் இறைவனை அடைந்து உய்ய வேண்டும் என்கிற நோக்கிலே, வீடுபேற்றிற்கான முக்கியமான படிநிலைகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றையும் கந்தபுராணம் விரிவாக உணர்த்தி நிற்கின்றது. வெவ்வேறுபட்ட மக்களும் எளிதில் அறிந்து பின்பற்றி நடக்கும் வகையில் ஒரு நெறியை மட்டும் வலியுறுத்தாமல் நான்கு நெறிகளுக்கான பாதையையுமே கந்தபுராணம் வகுத்துக் கொடுக்கின்றது. மேலும், கந்தபுராணம் வீடுபேற்றினை மிகவும் வலியுறுத்தி நிற்கின்றது என்பதையும் ஆய்வின் வழி அறிய முடிகிறது.

அனைத்து ஆன்மாக்களும் ஒன்று போல ஒரே நேரத்திலோ ஒரே காலச்சூழலிலோ ஒரே பிறவியிலோ வீடுபேற்றினைப் பெற்றிட முடியாது. ஆனால் அதன் தொடக்கப் படிகளில் ஏறி முன்னேறிச் செல்ல முடியும். அதற்கு ஒரு ஊன்றுகோலாகவே கந்தபுராணம் திகழ்கிறது எனலாம். எனவே, கந்தபுராணம் தன்னுடைய கதை நிகழ்வுகளினாலும், கதை மாந்தர்களினாலும், கவிக்கூற்றுகளினாலும் மெய்ப்பொருள் சிந்தனையைத் தூண்டி, ஆன்மாக்களை வீடுபேற்றிற்குச் செல்லத் தூண்டுகிறது என்னும் கருத்துப் பெறப்படுவதினால் ஆய்வின் கருதுகோளானது நிறுவப்படுகிறது.

பரிந்துரைகள்

கந்தபுராணத்தில் மெய்ப்பொருளியல் கூறுகள் என்னும் இவ்வாய்வானது சைவ சித்தாந்தக் கருத்துகளை நன்குணர்ந்து இறைவனைப் போற்றி வணங்கி பேரின்பத்தைப் பெறும் நாட்டத்தை ஏற்படுத்தும். கந்தபுராணத்தின் மெய்ப்பொருளியல் சிந்தனைகளைக் கொண்டு மேலும் பல ஆய்வுகள் நிகழ்த்தலாம் எனப் பரிந்துரைக்கப்படுகின்றது.

- கந்தபுராணம் காட்டும் இறைவனின் திருவுருவங்களும் அதன் தத்துவங்களும்.
- கந்தபுராணத்தில் வினைக் கொள்கை - ஓர் ஆய்வு.
- கந்தபுராணத்தில் தொண்ணுற்றாறுத் தத்துவங்கள் - ஓர் ஆய்வு.
- கந்தபுராணம் சுட்டும் நான்கு நெறிகளும் வீடுபேறும்.

முதலிய தலைப்புகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படலாம்.

ஆய்வின் இறுதியில் ஆய்விற்குத் துணை நின்ற நூல்கள், அகராதிகள் முதலானவை துணைநூற்பட்டியலில் இடம்பெறுகின்றன. பின்னிணைப்பில் கந்தபுராணத்தின் கதைச் சுருக்கம், பதி, பசு, பாசம் ஆகியவற்றை விளக்கும் செயல்வழிப்படம் (Flow chart), அண்டகோசப் படலத்தில் இடம்பெறும் வானியல் செய்திகள், கலைச்சொற்கள் ஆகியவை இடம்பெறுகின்றன.

ஆய்வுக் கட்டுரைகள்

வ.எ.	**கட்டுரைத் தலைப்பு**	**ஆய்விதழ்**	**ஆண்டு**
1.	கந்தபுராணத்தில் வினைக்கொள்கை - எடுத்துரைப்பியல் நோக்கு	தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்	ஜூன் 2023
2.	தத்துவ நோக்கில் கந்தபுராணம் காட்டும் சோமாஸ்கந்த வடிவம்	தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்	ஜூலை 2023